**கவனிக்க.**- 2006.06.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1453 - 2006 ජූලි 07 වැනි සිකුරාදා - 2006.07.07

1453 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 626 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 626 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, யூலை 14 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, யூன் 30 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

பகிரங்க நொத்தாரிசு ஜி. எச். ஜி. ஆமகஹவிட்ட என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 18.11.2005 ஆந் திகதியிடப்பட்ட அட்டோர்ணி தத்துவ இல. 308 மூலம் கெஸ்பேவ, மாவித்தர, ஹொரண வீதி, இல. 10/5 ஐச் சேர்ந்த திரு. பாலித்த எதிரிவீர விஜேசூரிய என்பவருக்கு மேற்படி தத்துவத்தை வழங்கியவரான நுகேகொடை, கோட்டே வீதி, இல. 264 இல் வசிக்கும் சாந்த ரன்ஜினி எதிரிவீர விஜேசூரிய ஆகிய என்னால் வழங்கப்பட்ட அட்டோர்ணி தத்துவம் 2006, யூன் 30 ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்யப்படுகின்றது எனவும் இத்திகதிக்குப் பின்னர் அவரால் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல என்பதையும் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

சாந்த ரன்ஜினி எதிரிவீர விஜேசூரிய.

13.06.2006.

7-16

---

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு 5, எலிபாங்க் வீதி, இல. 4 இல் வசிக்கும் மேரி பெர்னடெட் சுரங்கனீ ஜயசேக்கர மற்றும் இல. 25/2, எலிபாங்க் வீதி, கொழும்பு, 5 இல் வசிக்கும் மேரி ஜோசபின் என்னெட் பீரிஸ் ஆகிய நாம் பொதுமக்களுக்கும், இலங்கை சனநாயக சோசலிசக் குடிரசுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவெனில் மேற்கூறப்பட்ட இலங்கைக் குடியரசிலுள்ள கொழும்பு 5, கிளீஸ்ஸன் பிளேஸ், இல. 12 ஐச் சேர்ந்த ஒல்கா மேரி கேர்டிலைன் விஜயநாயக்க என்பவரால் எங்களுக்கு வழங்கப்பட்ட கொழும்பு பகிரங்க நொத்தாரிசு ஏ. ஏ. எச். டப்ளிவ் ஜயசேக்கரவினால் உறுதிப்படுத்தப்பட்ட 2001, நவெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட உரிமைத் தத்துவ இல. 2564 இத்தால் இரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியாததாக்கப்படுகின்றது எனவும் ஆகவே அட்டோர்ணி தத்துவத்தின்கீழ் நடாத்தப்படுகின்ற எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாம் பொறுப்பாளியல்ல என்பதையும் இத்தால் அறியத்தருகின்றோம்.

மேரி பெர்னடெட் சுரங்கனீ ஜயசேக்கர.
மேரி ஜோசபின் என்னட் பீரிஸ்.

7-23

---

## அட்டோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, கொழும்பு 7, லோங்டன் பிளேஸ், மலலசேகர மாவத்தை, இல. 30/46 ஐச் சேர்ந்த தர்ஷினி அன்னா டீ சொய்சாவாகிய என்னால் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். எம். வீரசூரிய அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000, யூலை 10 ஆந் திகதியிடப்பட்ட அட்டோர்ணித் தத்துவப்பதிவகத்தில் 211 ஆம் தொகுதி, பக்கம் 163 இல் 2000, யூலை 11 இல் தொடர்பு இல. 5460 இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட அட்டோணித் தத்துவ இல. 58 இன் பிரகாரம் கொழும்பு 7, லோங்டன் பிளேஸ், மலலசேகர மாவத்தை, இல. 30/46 ஐச் சேர்ந்த லக்ஷ்மி டெலி டீ சொய்சா அவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைச் செல்லுபடியற்றதாக்கி, இரத்துச் செய்வதாய் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசுக்கும், பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

தர்ஷனி அன்னா டீ சொய்சா.

2006, யூன் 12.

7-120

---

# ஏல விற்பனைகள்

## இலங்கை வங்கி

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22 ஆம் பிரிவு (397 ஆம் அத்தியாயம்) அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இல. 296/93

இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2006.01.12 ஆந் திகதிய 1428 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 2006.01.06 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதிவரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 474, மஹானாம ரயில் பிட்டகோட்டை என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ரன்சித மஹானாம 2006.08.05 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### காணிச்சொத்தின் விவரணம்

1. மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை, தொட்டமுனை, பாணந்துறை தல்பிட்டி தெபத்தையில் கெசல்வத்த, நகரசபை எல்லைகளுள் ஹொரேதுடுவ குருந்துவத்த அல்லது கொரககஹலகந்தயும் ஹொரேஉடுவேவத்தயின் துண்டு சி 1இல் பிரிக்கப்பட்ட ஒரு பகுதி, (காலி றோட் வரிமதிப்பிலக்கம் 3 மற்றும் 3/7 ஐக் கொண்ட நிலமனைகளின் ஒரு பகுதி) ஹொரேதுடுவயில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சி. டபிள்யு. தி. மெல் தயாரித்த 1960 சனவரி 6 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1396 இல் விவரித்த துண்டு 3ஏ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : அதே காணியின் ஒரு பகுதியும் ; கிழக்கில் : துண்டு 4ஏயும் ; தெற்கில் : துண்டு ; 3பீயும் ; மேற்கில் : துண்டு 2ஏயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1396 இன்படி பதினான்கு தசம் ஆறு மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 14.63பே.)

*விஸ்தீரணமுடையதாகும். இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் எவ் 196/ 102 இல் பதிவு செய்யப்பட்டது.*

*2. மேற்குறிப்பிட்ட ஹொரேதுடுவயில் அமைந்ததும் காலி றோட், வரிமதிப்பிலக்கம் 3 மற்றும் 3/7 ஐக் கொண்டதும் ஹொரேஉடுவேவத்த அல்லது கொரககஹலந்தயும் ஹொரேதுடுவவத்தயும் என அழைக்கப்படும் காணியின் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1396 இல் விபரித்த துண்டு 3பீ என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : துண்டு 3ஏயும் ; கிழக்கில் : துண்டு 4பீயும் ; தெற்கில் : துண்டு 28 உம் ; மேற்கில்: துண்டு 2பீயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1396இன்படி ஆறு தசம் ஆறு எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 06.68பே.) விஸ்தீரணமுடையதாகும். இது பாணந்துறை காணிப்பதிவகத்தில் எவ். 196/103 இல் பதிவு செய்யப்பட்டது.*

*அடுத்தடுத்து அமைந்துள்ள துண்டுகள் 3ஏ மற்றும் 3 பீ என அடையாளமிட்ட மேற்குறிப்பிட்ட காணித்துண்டு தற்சமயம் ஒரு காணியாக்கப்பட்டுள்ளதுடன் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. எச். மைக்கல் ஜே. சில்வா தயாரித்த 1993 யூன் 20 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 583 இன்படி பின்வரும் விதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது :-*

*மேற்குறிப்பிட்ட ஹொரேதுடுவேகுருந்துவத்த மறுபெயர் கொரககஹலந்தயும் ஹொரேதுடுவத்த (ரீ. பீ. 30180டின் பகுதி) மற்றும் ஹொரதுடுவே குருந்துவத்த மறுபெயர் கொரககஹலந்தயும் பொகுனேவத்தயும் (ரி. பி. 30180சி இன் பகுதி) என அழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : ஹொரேதுடுவ குருந்துவத்த மறுபெயர் கொரககஹலந்தயும் ; கிழக்கில் : வரைபடம் இல. 1396 (3ஏ மற்றும் 3பீ) இல் துண்டுகள் 4ஏ மற்றும் 4பீ யும் ; தெற்கில் : ஸ்ரீ தம்மதாச மாவத்தையும் ; மேற்கில் :வரைபடம் இல. 1396 (3ஏ மற்றும் 3 பீ) துண்டுகள் 2பீ மற்றும் 2ஏயும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 583இன்படி இருபது தசம் ஆறு எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 20.68பே.) விஸ்தீரணமுடைய காணியும் அத்துடன் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும்.*

*பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,*

*எம். விஜேசேகர,*
*கிளை முகாமையாளர்.*

*இலங்கை வங்கி,*
*மொரட்டுவ,*
*2006, யூன் 12.*

*7- 138*

---

**செலான் வங்கி லிமிட்டெட்-சிலாபம் கிளை**

*1990 ஆம் ஆண்டு வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழ் விற்பனை*

***வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், புத்தளம்பற்று பிரிவு, புத்தளம்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மங்களவெளி கிராமத்தில் அமைந்துள்ள புனித மிகாஇல் தோட்டம் என்று அறியப்பட்டதும் அழைக்கப்படுவதுமான அல்லது ஸ்ரீயாலியா தோட்டம் அல்லது சிரிசிலிஹேன்யாய அல்லது மங்களவெளிகாடு என்றழைக்கப்படுகின்றதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் வர்னன் பெரேரா என்பவரால் வரைவு இல. 6985 ஆம் 1994 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 8 ஆந் திகதியும் கொண்ட துண்டு இல. 01, துண்டு இல. 02, துண்டு இல. 03 மற்றும் துண்டு இல. 04 என்ற காணி 22ஏ. 02றூட். 05பே.) விஸ்தீரணம் கொண்டு காணித்துண்டு இல. 01 பாகம்/ பிரிவு பி 32/ 157, துண்டு இல. 02 பாகம்/ பிரிவு பீ32/ 158 துண்டு இல. 3, பாகம்/ பிரிவு பீ29/ 56 மற்றும் துண்டு இல. 4, பாகம்/ பிரிவு பீ29/ 57 இன்கீழ் புத்தளம் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளதுமான பெறுமதிவாய்ந்த காணி ஏல விற்பனை***

*கடன்பட்டார் என்றவகையில் ராஜகிரியவைச் சேர்ந்த மைக்கில் அலெக்சிஸ் ஜயசூரிய என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்கு செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட காணி. மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2006, யூலை 27 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின்மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.*

***மேலதிக விபரங்களுக்கு.-** 2006.02.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2006.01.16 ஆந் திகதிய "டெயிலி மிரர்" மற்றும் "லங்காதீப" மற்றும் 2006.01.30 ஆந் திகதிய "வீரகேசரி" நாளிதழ்களையும் பார்க்கவும்.*

***காணியைச் சென்றடைகின்ற வழி.-** கொழும்பிலிருந்து புத்தளம் வீதியில் 70 ஆம் மைல் கல்லைத் தாண்டி சுமார் 300 யார் தூரம் சென்று வலதுபக்கம் திரும்பி சுமார் 2 மைல் மரிச்சிகட்டுவ பிரதேச சபை சரளைக்கல் வீதி ஊடாகச் சென்று குறித்த காணியைச் சென்றடைய லாம். காணியைச் சென்றடைய சட்டவீதியான வாகன போக்குவரத்து நுழைபாதை உள்ளது என்பதைக் கவனத்தில்கொள்ளவும்.*

***கட்டணம் செலுத்தும் முறை.-** வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும் :-*

*கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்தவேண்டியது ஒரு வீதம் (1%) ; ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/ 2%) ; விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2,000 ; இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500 ; விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச்செய்தல் வேண்டும்.*

*காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 2456284, 2456285, 2456263.*

*துசித கருணாரத்ன,*
*அனுமதிபெற்ற ஏலதாரர்,*
*நீதிமன்ற ஆணையாளரும்.*

*ரி அன்ட் எச் ஒக்சன்,*
*இல. 50/3, விஹார மாவத்தை,*
*கொலொன்னாவ,*
*தொலைபேசி : 2696155, 2572940.*

*7-117*

**மக்கள் வங்கி-தெல்தெனிய கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**காணியும் அதன்கண் அமைந்துள்ள வீடும் ஏல விற்பனை**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்ததும்பரை உடகம்பஹா கோரளே, கெங்கல்ல கிராமத்தில் அமைந்துள்ள ரஜவெல்ல வத்த என்றழைக்கப்படும் காணியை உத்தரவுபெற்ற நில அளவையாளரான சுனிமல் அபேசுந்தர அவர்களால், 1995.03.25 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 658 ஆம் இலக்கங்கொண்ட மூல வரைவுபடத்தின் 2 ஆம் லொட் இலக்கத்தைக் கொண்ட இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.) விசாலமுள்ள காணியும் அங்கே அமைந்துள்ள வீடும் மக்கள் வங்கி மூலம் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் எங்களால் 2006.08.30 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு பிரசித்த ஏலத்தில் ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்காக**.- 2006.01.13 ஆந் திகதிய வர்த்தமானியிலும் 2005.12.30 ஆந் திகதிய "டெயிலி நியூஸ்", "தினகரன்", "தினமின" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப் பட்டிருக்கும் ஏல விற்பனை தீர்மான அறிவித்தலுக்குக் கவனம் செலுத்தவும்.

**ஆதனத்திற்கு நுழையும் வழி**.- கண்டியிலிருந்து தெல்தெனிய பாதையில் 14 கிலோ மீட்டர் திகன வரை சென்று தெற்கு திசையில் திரும்பி அலுத்வத்த பாதையில் 1.5 கிலோ மீட்டர் அளவில் பயணம் செய்த பின்பு சந்திக்கும் அலுத்வத்த பன்சலை 50 மீட்டருக்கு அப்பால் இக்காணி அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை**.- ஏல விற்பனையின் இறுதியின்போது ஒரு சிறந்த கொள்வனவாளர் மூலம் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஒரு பணத்தொகையைச் செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையில் 10% ;
2. பிரதேச சபையின் குத்தகைக்காக 1% ;
3. விற்பனை விலையில் 2.5% ;
4. இலிகிதர் அறிவித்தல் கட்டணமாக ரூபா 500 ;
5. விற்பனைச் செலவும், ஏனைய கட்டணங்கள் இருப்பின் அத்தொகையும்,

கொள்வனவு விலையில் மிகுதியாகிய 90% ஆகிய தொகையும் விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மக்கள் வங்கி, கண்டி பிரதேச பிரதான அலுவலகத்தில் பிரதேச முகாமையாளருக்கு செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 081-2234283, தொலைநகல் இல. : 081-2223017.

உரிமை ஒப்பனைகளும், ஏனைய அதற்குரிய விபரங்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தொகை 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால், தற்போது செலுத்தப்பட்டுள்ள கொள்வனவு விலையில் 10% தொகையை மீண்டும் செலுத்தாமல் விடுவதற்கும், மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யும் உரிமையும் மக்கள் வங்கிக்கு உண்டு.

சொக்மன் மற்றும் சமரவிக்ரம,
இலங்கையில் முன்னணியில் திகழும்
உத்தரவுபெற்ற ஏலதாரர்கள்
(அரச, தனியார் வங்கி)
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்களும்.

| *பிரதான அலுவலகம் :* | *நகர அலுவலகம் :* |
|---|---|
| 24, டொரிங்டன் பாதை, கண்டி. | 55ஏ, தர்மபால மாவத்தை, கொழும்பு. |
| தொலைபேசி : 081-2224371, 081-2227593 | தொலைபேசி இல. : 011-448526, 5752214 |
| தொலைநகல் : 081-2224371 | தொலைநகல் : 011-2448526, 5752214 |
| | மின்னஞ்சல் : sameera@srilanka.net |

7-55

---

**இலங்கை வங்கி**

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 397) 22 ஆம் சரத்தினதும் அதன் 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கம் கொண்ட அதிகாரச் சட்டத்தினாலும் 1970 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கம் கொண்ட சட்டத்தினாலும் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களினதும்கீழான விற்பனை அறிவித்தல்

கடன் தொடர்பு இலக்கம் : 404/ 2002-திரு. ஈ. ஜீ. யசரத்ன- பஹாளவெவ, தளகிரியாகம

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் சரத்தின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூட்ட தீர்மானத்திற்கமைய தொடர் நடவடிக்கையாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 02.09.2005 ஆந் திகதிய 1409-2005 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையிலும் 26.08.2005 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "டெயிலி நியூஸ்" பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டவிதமாக முற்தொகையின் நிலுவைப்பணத்தையும் ஆதன விற்பனவுத் திகதி வரைக்கும் வருமதியாகவுள்ள உரிய வட்டியையும் அதனுடன் சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் சரத்தின்கீழ் அறவிடவேண்டிய கட்டணத்தையும் பணத்தையும் அறவிடும் பொருட்டு இதன்கீழ் அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனமும் அதன் நிலப்பரப்பும் கண்டி, டொரிங்டன் வீதி, இல. 24 விலாசம் கொண்ட ஏலவிற்பனையாளர்களான திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்கிரம ஆகியோர்களினால் 24.07.2006 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், கலேவெல பிரதேச செயலாளர் பிரிவில், கந்தபள்ள கோறளை, பஹலவெவவில்

அமைந்துள்ள தம்புள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். அனுரரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1998.09.23 ஆந் திகதிய 186 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் காட்டப்பட்டுள்ள "கறங்கஹமுல தங்கொட்டுவ" என்றழைக்கப்படும் மேற்கூறிய, 186 ஆம் இலக்க வரைபடத்திற்கிணங்க- வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் 1 ஆம் துண்டும் (மிகவும் சரியாக துண்டு 4) ; கிழக்கில் : மேற்கூறிய வரைபடத்தின் துண்டு 1 உம் ; தெற்கில் : ஈ. ஜி. உக்குறால விற்குச் சொந்தமான துண்டு 3 உம் ; மேற்கில் : குருணாகலையிலிருந்து தம்புள்ளவிற்குச் செல்லும் பெருந்தெருவும் எல்லைகளாகக் கொண்ட ஒரு றூட் ஆறு தசம் நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 6.4பே.) அல்லது 0.1174 ஹெக்ரயார் விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள முழுக்காணியும் அதற்குள் உள்ள அனைத்துமாகும்.

இது மாத்தளை காணிப்பதிவகத்தில் டி. 429/ 209 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கே. டபிள்யூ. சமரரத்ன,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
தம்புள்ள.

7-139

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்**.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 4.45 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம்** :-

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டுக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.-** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை-2006

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 07.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.06.2006 |
| | | வெள்ளி | 14.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.06.2006 |
| | | வெள்ளி | 21.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.07.2006 |
| | | வெள்ளி | 28.07.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.07.2006 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 04.08.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.07.2006 |
| | | வெள்ளி | 11.08.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.07.2006 |
| | | வெள்ளி | 18.08.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.08.2006 |
| | | வெள்ளி | 25.08.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.08.2006 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 01.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.08.2006 |
| | | வெள்ளி | 08.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.08.2006 |
| | | வெள்ளி | 15.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.09.2006 |
| | | வெள்ளி | 22.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.09.2006 |
| | | வெள்ளி | 29.09.2006 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.09.2006 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006, சனவரி 01.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.